IN THE COURT OF DISTRICT MUNSIF KATPADI, VELLORE DISTRICT.
OS.No.59/2014
Deposition of Witness for DW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாண்டியன் | Caste | : | |
| Father Name | : | சேட்டு | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23rd day of July, 2026.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை: -

1. இந்த பிரமாண வாக்குமூலத்தை நான் தான் தாக்கல் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் 5 வருடமாக அதாவது 2011 யிலிருந்து 2016 வரை நான் தலைவராக இருந்தேன். பிரதிவாதி 1 முதல் 5 வரை உள்ளவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் சொல்ல வந்தேனா என்றால் 1ம் பிரதிவாதி பஞ்சாட்சரம் கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியம் சொல்ல வந்தேன். பொது இடத்தில் அதாவது கோவிலுக்கு அருகில் வாதி பொது சொத்தை ஆக்கிரமித்து பாத்ரூம் கட்டியதால் ஊர் பஞ்சாயத்து தலைவர் என்ற முறையில் நாங்கள் கேட்டோம். அதனால் வழக்கு தாக்கல் செய்தார். பொது இடம் என்பதற்கு நான் இந்த வழக்கில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

2. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 4 வது பத்தியில் வாதி உடைய கணவர் வேல்முருகன் அந்த இடத்தை பொது இடமாக அனுபவித்து கொள்ள ஒப்புதல் கடிதம் கொடுத்துள்ளார் என்று நான் குறிபிட்டுள்ள நிலையில் அவ்வாறு நான் ஏதேனும் தாக்கல் செய்துள்ளார்களா என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியவில்லை. வாதி நாங்கள் பிரச்சனை செய்ததால் எங்கள் மீது காட்பாடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அது எனக்கு தெரியும். மேற்படி காவல் நிலையத்தில் இது உரிமையியல் வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தானது மீரா

பாய்க்கு அவருடைய மூதையார் மூலம் வந்த சொத்து என்றாலும்  அதனால் பொது சொத்து என்று சொல்வது தவறு என்றால்  சரியல்ல. வாதி தான் தாவா சொத்தில் அனுபவித்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல.  தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(Sd/-)..K.Inbarani
DISTRICT MUNSIF
KATPADI